

மதுரையில் திராவிடர் கழகம் சார்பில் இந்தியா முழுமைக்கும் நீட் தேர்வினை ரத்து செய்யக் கோரி ஒன்றிய அரசை வலியுறுத்தி நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி பங்கேற்று கண்டன உரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் ம.ஒச்சுபாலு, பி.டி.மணிமாறன், மூவேந்திரன், சுபா கண்ணன், தஞ்சை மதி, அழகு சுந்தரம், நூர்ஜகான் பேகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், திராவிடர் கழக நிர்வாகிகள் மற்றும் தி.மு.க. கூட்டணி கட்சி நிர்வாகிகள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி தி.மு.க சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அர.சக்கரபாணி பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச்செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், வெற்றிக்காக உழைத்த கழக உடன்பிறப்புக்களுக்கும், தோழமைக் கட்சி தோழர்களுக்கும், ஆதரவு வழங்கி அனைத்து அமைப்புகளுக்கும் புளியமரத்துக்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில் நன்றி தெரிவித்தார். அதனை தொடர்ந்து புலியூர்நத்தம், கேதையுறம்பு ஊராட்சிக்குட்ட கிராமங்களில் நன்றி தெரிவித்தார். உடன் ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றிய கழக செயலாளர் எஸ்.ஆர்.கே.பாலு, ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் க.தங்கராஜ், பூரணம் ராஜேந்திரன், தங்கவேல், கேதையுறம்பு வேலுச்சாமி மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.

# கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் சி.வெ.கணேசன் அறிக்கை!



கடலூர், மே 19 -

கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி, கழக இளைஞரணி செயலாளர், சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் அவர்களின் வழிக்காட்டுதலின்படி, கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் (20.05.2026 புதன் கிழமை ) மாலை 4.15 மணி அளவில், நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில் மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அதுசமயம், கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்டக் கழக நிர்வாகிகள்,

முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் தொ.மு.ச. நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. ஜீன் 3 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா.

2. நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வு குழு வருகை சம்பந்தமாக

3. தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தல்.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற 14/05/2026 தேதிய மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் மற்றும் 16/05/2026 தேதிய கள ஆய்வுக்குழு உறுப்பினர்கள் கூட்டம் ஆகியவற்றில் வகுக்கப்பட்ட வழிகாட்டுதலின்படி, கழக சட்ட திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர் மற்றும் கழக மகளிர் அணி இணையதள செயலாளர் டாக்டர். யாழினி ஆகியோர் ஆய்வுப்பணி மேற்கொள்ள உள்ள திருநெல்வேலி (மத்திய), திருநெல்வேலி (மேற்கு), திருநெல்வேலி (கிழக்கு), கன்னியாகுமரி (மேற்கு), மற்றும் கன்னியாகுமரி (கிழக்கு) ஆகிய மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பொறுப்பாளர்களுடன் ஆலோசனை செய்து எடுக்கப்பட்ட முடிவுகளையொட்டி கீழ்க்கண்ட அட்டவணைகளின்படி ஆய்வுப்பணிகள் நடைபெற உள்ளன.

**நெல்லை மாவட்ட கள ஆய்வு நிகழ்ச்சி நிரல் விபரம்:**

1. 19/05/2026 செவ்வாய்க்கிழமை பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி
2. 20/05/2026 புதன்கிழமை நெல்லை சட்டமன்றத் தொகுதி
3. 21/05/2026 வியாழன் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி
4. 22/05/2026 வெள்ளி ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி
5. 23/05/2026 சனிக்கிழமை இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி
6. 26/05/2026 செவ்வாய்க்கிழமை நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி

**குமரி மாவட்ட கள ஆய்வு நிகழ்ச்சி நிரல் விபரம்:**

1. 27/05/2026 புதன்கிழமை பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதி
2. 28/05/2026 வியாழன் விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி
3. 29/05/2026 வெள்ளி கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி
4. 30/05/2026 சனிக்கிழமை கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி
5. 31/05/2026 ஞாயிறு குளச்சல் சட்டமன்றத் தொகுதி
6. 01/06/2026 திங்கள் நாகர்கோயில் சட்டமன்றத் தொகுதி

**காலை: 9.30**

மாவட்டச் செயலாளர், மாவட்ட நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், 2026 சட்டமன்ற தேர்தல் வேட்பாளர்கள், தலைமைக்கழக பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர மற்றும் பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக்கழக, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் பாகநிலை முகவர்கள் (BLA 2) பங்கேற்றிட வேண்டும்.

குறிப்பு: தற்போது பொறுப்பில் இல்லாத மூத்த கழக முன்னோடிகளையும் கண்டிப்பாக பங்கேற்றிடச் செய்திட வேண்டும்.

**மாலை: 4.00 மணி**

கழக சார்பு அணிகளின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் நிர்வாகிகள் பங்கேற்றிட வேண்டும்.

கூட்டத்தில் கைபேசிகள் தவிர்க்கப்பட வேண்டும்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் தலைமையின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி நிகழ்ச்சிகளை பொருத்தமான இடங்களில் ஏற்பாடு செய்திடுவதோடு, சம்பந்தப்பட்ட அனைவரும் கட்டாயம் கலந்து கொள்ள செய்ய வேண்டுமாய் அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூட்டத்தில் கலந்துகொள்ளும் கழக நிர்வாகிகள் மற்றும் முன்னோடிகள் தங்களது கருத்துகளை வாய்மொழியாக கூறுவதோடு, எழுத்துப் பூர்வமாகவும் அளிக்கலாம்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 17.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஆ.மணி எம்.பி. அறிக்கையின் படி பென்னாகரம், தருமபுரி, அரூர் சட்டமன்றத் தொகுதிகளில் கள ஆய்வுக்குழுக் கூட்டம் **சி.என்.அண்ணாதுரை எம்.பி., திருமதி ரத்னா லோகேஸ்வரன்** ஆகியோர் தலைமையில் கீழ்க்கண்டவாறு நடைபெறவுள்ளது.

| வ.எண் | சட்டமன்றத் தொகுதி | நாள் | இடம் |
|---|---|---|---|
| 1. | பென்னாகரம் | 28.05.2026 வியாழக்கிழமை | குமார் மஹால் , B.அக்ரஹாரம் |
| 2. | தருமபுரி | 29.05.2026 வெள்ளிக்கிழமை | ஜோதி மஹால், தருமபுரி |
| 3 | அரூர் | 30.05.2026 சனிக்கிழமை | ஆசியா மஹால் , அரூர் |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 18.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## ஜூன் –3 முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

# திருப்பத்தூர் மாவட்டத்தில் கழகக் கூட்டணிக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! க.தேவராஜ் சிறப்புரை!




திருப்பத்தூர், மே 19 -

திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டமானது வாணியம்பாடியில் உள்ள மாவட்டக் கழக அலுவகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் நூருல்லா,

மாவட்ட துணை செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார்,

மாவட்டப் பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதிராஜன் மற்றும் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம் 1:

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, ஜீன் 3-ம் தேதி திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக்கழகங்கள் சார்பில் கழக கொடியேற்றியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும், கல்வி உபகரணங்கள் வழங்கியும், ஏழை எளியோருக்கு உணவு வழங்கியும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தீர்மானம் 2:

கழக இளைஞரணி செயலாளர் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை எதிர்¬க்கட்சி தலைவராக நியமித்த கழக தலைவர் தளபதியார் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், எதிர்க்கட்சி தலைவராக நியமிக்கப்பட்டுள்ள இளந்தலைவர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துகள் தெரிவித்தும் தீர்மானம் நிறை வேற்றப்படுகிறது.

தீர்மானம் 3:

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள வாணியம்பாடி, ஆம்பூர், ஜோலார் பேட்டை, திருப்பத்தூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் கழக வேட்பாளர்கள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கும், களப்பணியாற்றிய கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கூட்டணி கட்சி தோழர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக நன்றி தெரிவிக்கப்படுகிறது.

தீர்மானம் 4:

கழக தலைவர் தளபதியார் அவர்கள் தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து தொகுதி வாரியாக கள ஆய்வு செய்ய குழு அமைக்கப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டத்திற்கு கள ஆய்வுக் குழுவினர் வருகையின் போது தேவையான ஏற்பாடுகளையும், ஒத்துழைப்பையும் அளிப்பது என்று தீர்மானிக்கப்படுகிறது.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் தா.உதயசூரியன் அறிவிப்பின்படி

கள ஆய்வுக் குழுவினர் மூத்த வழக்கறிஞர் ஜே.ரவிந்திரன்,

ஈரோடு ஜெ.வீரமணி (மாநில மாணவர் அணி செயலாளர்) ஆகியோர், சங்கராபுரம் மற்றும் உளுந்தூர் பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கு வருகை தருகின்றனர். அதுசமயம் காலை 9:00 மணி முதல் 1:00 மணி வரை.

**சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி:**

19-05-2026 செவ்வாய்க்கிழமை, என்.எஸ்.கே. திருமண மண்டபம், மேலோி, சங்கராபுரம்.

**உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதி:**

22-05-2026 வெள்ளிக்கிழமை லலிதா சக்கரவர்த்தி திருமண மண்டபம், உளுந்தூர்பேட்டையில் நடைபெறுகிறது.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழியில் இராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதி இராணிப்பேட்டை நகர பகுதிகளில் உள்ள வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு மற்றும் மதச்சார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களிடம் முன்னாள் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி நன்றி தெரிவித்தார் .இதில் நகர மன்ற தலைவர் சுஜாதா வினோத், நகர கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், மாவட்ட நகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.